பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**27 05 2026** **6 45**

புதன்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா - ஆஸ்திரேலியா இடையே பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் முதலீடுகளை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள 69 சதவீத இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அதிகாரிகளுக்கு முதலமைச்சர் திரு. விஜய் அறிவுறுத்தியுள்ளார்.

3. விருதுநகர் மாவட்டத்தில் விதிமுறைகளை மீறி செயல்பட்டு வந்த 23 கல்குவாரிகளை தற்காலிகமாக நிறுத்த மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

4. தமிழகத்தில் அடுத்த 5 நாட்களுக்கு இடி மின்னலுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**5.** ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில், குஜராத் அணியை வீழ்த்தி, பெங்களூரு அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

இந்தியா - ஆஸ்திரேலியா இடையே பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் முதலீடுகளை அதிகரிக்க திட்டமிட்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலிய வெளியுறவுத்துறை அமைச்சர் **Penny Wong**-ஐ பிரதமர் புதுதில்லியில் நேற்று சந்தித்துப் பேசினார்.

இந்த சந்திப்பு குறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்தியா - ஆஸ்திரேலியா இடையே பாதுகாப்பு, வர்த்தகம், தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் ஒருங்கிணைந்த நல்லுறவை மேம்படுத்தவும், முதலீடுகளை அதிகரிப்பது குறித்தும் விரிவாக ஆலோசித்ததாக தெரிவித்துள்ளார்.

இந்தோ-பசிபிக் நாடுகளின் பாதுகாப்பு மற்றும் முன்னேற்றத்திற்கு வெளிப்படையான நடவடிக்கைகளை தொடரவும் முடிவு செய்யப்பட்டதாக பிரதமர் அதில் கூறியுள்ளார்.

இதேபோல் ஜப்பான் வெளியுறவு அமைச்சர் **Toshimitshu Motegi**-யையும் பிரதமர் திரு. நரேந்திர மோடி வரவேற்றார்.

இந்தியா-ஜப்பான் இடையே அமைதி, ஸ்திரத்தன்மை மற்றும் முன்னேற்றத்தை மேலும் முன்னெடுத்துச் செல்வதற்கு உலக நாடுகளுடன் இணைந்து முக்கிய பங்காற்றுவதை உறுதி செய்வதாகவும் மற்றொரு பதிவில் திரு. நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

<<<<>>>>

தமிழ்நாட்டில் கல்வி, வேலைவாய்ப்புகளில் நடைமுறையில் உள்ள **69** சதவீத இடஒதுக்கீட்டைப் பாதுகாக்க உரிய சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் தெரிவித்துள்ளார்.

கல்வி நிலையங்களில் மாணவர் சேர்க்கை மற்றும் அரசு வேலைவாய்ப்புகளில் **69** சதவீத இடஒதுக்கீட்டுக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ள வழக்குகளின் விசாரணை இன்று வர உள்ள நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுடன் முதலமைச்சர் ஆலோசனை நடத்தினார்.

அப்போது 69 சதவீத இடஒதுக்கீட்டினைப் பாதுகாக்கும் நோக்கில் தேவையான சட்ட நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ள அவர் அறிவுரை வழங்கியதாக அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<>>>>

முதலமைச்சர் திரு. ஜோசப் விஜய் இன்று புதுதில்லியில் பிரதமர் திரு. நரேந்திர மோடியை சந்திக்கிறார்.

தமிழக முதலமைச்சராக பொறுப்பேற்ற பின்னர் திரு. விஜய் முதல் முறையாக இன்று தில்லி செல்கிறார்.

மாலை நான்கரை மணியளவில் அவர் பிரதமரை சந்திக்க இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

காலி மதுபாட்டில்கள் விவகாரம் தொடர்பாக ஈரோடு உள்ளிட்ட ஒருசில மாவட்டங்களில் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள டாஸ்மாக் பணியாளர்கள், பணிக்கு திரும்ப வேண்டும் என்று மாநில மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. விக்னேஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் காலி மது பாட்டில்களை திரும்பப் பெறும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருவதாக அரசு செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் பாட்டில்களை வெளி முகமை மூலமாக திரும்பப் பெறுவது குறித்து, உயர்நீதிமன்றத்தில் உறுதிப்பத்திரம் அளிக்கப்பட்டு, வரும் ஜூன் மாத இறுதிக்குள் பணியாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு மதிப்பளித்து பணியாளர்கள் அனைவரும் இன்று முதல் வழக்கம்போல் பணிக்கத் திரும்ப வேண்டும் என்று அமைச்சர் கேட்டுக்கொண்டிருப்பதாகவும் அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

அம்மா உணவகங்களில் முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் புகைப்படங்களை நீக்கிவிட்டு முதலமைச்சர் திரு. விஜயின் புகைப்படங்களை வைத்திருப்பதற்கு அஇஅதிமுக கண்டனம் தெரிவித்துள்ளது.

அக்கட்சி வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் அம்மா உணவகங்கள் என்றாலே மாநிலம் முழுவதும் மக்களின் உள்ளத்தில் தோன்றுவது ஜெயலலிதாவின் உருவம்தான் என்று கூறியுள்ளது.

இத்தகைய செயல்களைத் தவிர்த்து, அம்மா உணவகங்களின் செயல்பாடுகள் குறித்த அறிவிப்பை அரசு தீவிரமாக நிறைவெற்ற வேண்டும் என்றும் அதில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

<<<<>>>>

விருதுநகர் மாவட்டத்தில் விதிகளை மீறி செயல்பட்டு வந்த 23 கல்குவாரிகளை தற்காலிகமாக நிறுத்த மாநில கனிமவளத்துறை அமைச்சர் டாக்டர் டி.கே. பிரபு உத்தரவிட்டுள்ளார்.

இம்மாவட்டத்தில் சட்டவிரோதமாக கனிமங்கள் வெட்டி எடுக்கப்படுவதை தவிர்க்க 76 குவாரிகளில் ஆளில்லா விமானம் மூலம் அளவீடு செய்யப்பட்டு அறிக்கை பெறப்பட்டதாக அரசு செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதையடுத்து விருதுநகர் மாவட்ட புவியியல் மற்றும் சுரங்கத்துறை அதிகாரிகளுடன் ஆய்வு நடத்திய அமைச்சர், குத்தகை பரப்பிற்கு வெளியே குவாரிப் பணி மேற்கொண்ட 23 குவாரிகளை தற்காலிகமாக மூட உத்தரவிட்டதாக அதில் கூறப்பட்டுள்ளது.

<<<<>>>>

நீலகிரி மாவட்டம் உதகைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் குன்னூர் சிம்ஸ் பூங்காவில் பழக் கண்காட்சி இன்று தொடங்குகிறது.

ஜுராசிக் பார்க் என்ற கருப்பொருளுடன் நான்கு நாட்கள் இக்கண்காட்சி நடைபெற உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte — Saravanan — 46 Sec)**

<<<<>>>>

திருநெல்வேலி அருள்மிகு நெல்லையப்பர் கோவிலில் 34 ஆண்டுகளுக்குப் பின்னர் சுவாமி அம்பாள் உள்ளிட்ட பஞ்சமூர்த்திகள் வெள்ளித் தேரில் எழுந்தருளி ரத வீதிகளில் உலா வரும் நிகழ்ச்சி நடைபெற்றது.

திருவிளையாடல் திருவிழாவின் முக்கிய நிகழ்வாக நடைபெற்ற நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்று சாமி தரிசனம் செய்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**(Voice Byte - Kumar - 40 Sec)**

<<<<>>>>

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று முதல் வரும் 31ஆம் தேதி வரை இடி மின்னலுடன் கூடிய மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

மத்திய மேற்கு வங்கக் கடல் மற்றும் அதனையொட்டிள்ள பகுதிகளில் நிலவும் வளிமண்டல சுழற்சி காரணமாக, தமிழகத்தின் பெரும்பாலான மாவட்டங்களிலும், புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளிலும் அடுத்த 5 நாட்களுக்கு இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும்.

வெப்பநிலை இயல்பைவிட சற்றே அதிகரிக்கக் கூடும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

<<<<>>>>

*__இருவரிச் செய்திகள்__*

நிலவில் தளம் அமைக்கும் முயற்சியின் ஒரு பகுதியாக, ரோபோடிக் தரையிறங்கும் கருவிகள், ஆளில்லா விமானங்கள் குறித்த விவரங்களை நாசா வெளியிட்டுள்ளது.

----------

இந்தியா உள்ளிட்ட உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து ஹஜ் புனித யாத்திரைக்காக லட்சக்கணக்கானோர் சவுதி அரேபியாவில் குவிந்துள்ளனர்.

----------

சீனா மற்றும் பாகிஸ்தானின் கூட்டறிக்கையில் ஜம்மு-கஷ்மீர் குறித்த தகவல் இடம்பெற்றிருப்பதை இந்தியா நிராகரித்துள்ளது.

----------

நாட்டின் மக்கள் தொகை அதிகரிப்பை கட்டுப்படுத்த ஓய்வு பெற்ற உச்சநீதிமன்ற நீதிபதி திரு. பிரகாஷ் பிரபாகர் நவ்லேகர் தலைமையில் உயர்மட்ட குழு ஒன்றை மத்திய அரசு அமைத்துள்ளது.

----------

போக்குவரத்து விதிகளை மீறும் வாகன உரிமையாளர்களிடம் இருந்து உடனடியாக அபராதம் வசூலிக்கப்படுவதாக சமூக வலைதளங்களில் பரவி வரும் செய்தியை மத்திய அரசு மறுத்துள்ளது.

----------

மகாராஷ்டிராவின் பால்கர் சாலை விபத்தில் உயிரிழந்த 13 பேரின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபாய் நிதியுதவி வழங்க அம்மாநில அரசு உத்தரவிட்டுள்ளது.

----------

நாகப்பட்டினம் - தஞ்சாவூர் தேசிய நெடுஞ்சாலையில் நான்கு வழி திருவாரூர் புறவழிச் சாலை அமைக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

----------

திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி அருகே கொத்தூரில் உள்ள எல்லை சோதனைச்சாவடியை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. அக்ஷய் அனில் வாகரே ஆய்வு செய்தார்.

----------

கிருஷ்ணகிரி அணையில் இருந்து தண்ணீர் வெளியேற்றப்பட உள்ளதால் சாத்தனூர் அணை வரை உள்ள தென்பெண்ணை ஆற்றங்கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

----------

***விளையாட்டுச் செய்திகள்***

**ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியின் முதலாவது தகுதிச்சுற்று ஆட்டத்தில், குஜராத் அணியை 92 ரன் வித்தியாசத்தில் வீழ்த்தி, பெங்களூரு அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.**

**தரம்சாலாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் முதலில் விளையாடிய பெங்களூரு அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 254 ரன் எடுத்தது.**

**கேப்டன் ரஜத் பட்டிதார் 33 பந்துகளில் 93 ரன் குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.**

**விராட் கோலி, க்ருனால் பாண்ட்யா ஆகியோர் தலா 43 ரன் சேர்த்தனர்.**

**255 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் களமிறங்கிய குஜராத் அணி, அடுத்தடுத்து விக்கெட்டுகளை இழந்து 19 புள்ளி 3 ஓவரில் 162 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.**

**அந்த அணியில் ராகுல் தெவாட்டியா மட்டுமே 68 ரன் சேர்த்தார்.**

**இன்று நடைபெறும் வெளியேற்றுதல் சுற்று ஆட்டத்தில் ராஜஸ்தான் அணி - ஹைதராபாத் அணியை எதிர்கொள்கிறது.**

**சண்டிகரில் இப்போட்டி இரவு மணி 7.30க்கு தொடங்குகிறது.**

**<<<<The End>>>>**